# அறிவித்தல் இல. R/2025/04

## வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள அரச முதியோர் இல்லத்தில் நிலவும் ஆளணி வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு - 2025

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளரின் NP/06/01/02/02/01ம் இலக்க 2025.05.05ம் திகதிய கடிதம் மற்றும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் G/NPC/A10/S.S/APPROVAL/2025ம் இலக்க 2025.05.30ம் திகதிய அனுமதிக்கமைவாகவும், வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள அரச முதியோர் இல்லத்தில் நிலவும் கீழ்க்குறிப்பிடப்படும் ஐந்து (05) பதவியணிகளுக்கான ஆளணி வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கமைய, இவ்விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளுமுடைய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க முடியும். இவ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடாத்தப்படவுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.07.11 ஆகும்.

| பதவி இல. | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கடமைகள் |
|---|---|---|---|
| 01. | சாதுசேவிகா | 04 | 1. வைத்தியரின் ஆலோசனையுடன் முதியோர் பாதுகாப்பும் வைத்தியம் தொடர்பான பராமரிப்பும்.<br>2. முதியோரின் நன்மைக்காக சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளைச் செய்தல்.<br>3. கிளினிக் மற்றும் வைத்திய வசதிகளை நிச்சயப்படுத்தல்.<br>4. முதியோர் பராமரிப்பு தொடர்பாக உடனடிக் கவனம் செலுத்தும் இயலுமை இருக்க வேண்டும்.<br>5. முதியோரின் தனிப்பட்ட கவனிப்பு மேம்பாட்டில் நாளாந்த செயற்பாடுகளை பின்பற்ற வேண்டும்.<br>6. முதியோர் கவனிப்பு, உணவு விநியோகம், உரிய தங்குமிட வசதிகள், குடிநீர் மற்றும் சுகாதாரச் சூழல் ஆகியவற்றுக்கு பொறுப்பாயிருத்தல் வேண்டும். |
| 02. | பரிசாரகர் - ஆண் | 02 | முதியோர்களுக்கான பராமரிப்புச் சேவைகளை வழங்குவதோடு அவர்கள் தமது வீட்டில் வசிக்கின்ற மனநிலை உணரும் வண்ணம் நலனோன்புகை மற்றும் வாழ்வியலை உறுதிப்படுத்தல். |
| 03. | பரிசாரகர் - பெண் | 02 | |
| 04. | சமையலாளர் | 01 | 1. முதியோருக்கு பரிமாறும் வண்ணம் காலை, மதியம், இரவு வேளைக்கான சைவ, அசைவ உணவு வகைகளை தயாரித்தல் அல்லது சமைத்தல்.<br>2. காலை, மாலை வேளைகளில் சிற்றுண்டி வகைகள் மற்றும் தேநீர் தயாரித்தலும் வழங்கலும்.<br>3. சமையல் பாத்திரங்கள், வெட்டும் கருவிகள், ஏனைய உபகரணங்கள், தளபாடங்கள், கருவிகளைத் தூய்மையாகப் பேணல். |
| 05. | தொழிலாளி - ஆண் | 01 | முதியோர் இல்லத்தில் சுகாதாரம், சுத்திகரிப்பு மற்றும் முதியோருக்கான உணவு பரிமாறல் போன்ற சகல கடமைகள். |

## 1. பொதுத் தகைமைகள்

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ii) நன்னடத்தை உள்ளவராகவும், உடல் உள ஆரோக்கியம் உள்ளவராகவும், பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ள போதுமான உடற்தகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும். (விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அரச வைத்தியசாலையில் பெறப்பட்ட மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

(iii) விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவுத்திகதிக்கு உடன் முன்னரான *06* ஆண்டு காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் ஆகக்குறைந்தது *03* ஆண்டுகள் தொடர்ச்சியாக நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும். (நிரந்தர வதிவிடத்தை நிரூபிப்பதற்கு வாக்காளர் பட்டியல் சமர்ப்பிக்க வேண்டும்)

**அல்லது**

விண்ணப்பதாரி அல்லது அவரது பெற்றோர் வடக்கு மாகாணத்தில் பிறந்திருக்க வேண்டும். அத்துடன் ஆகக்குறைந்தது *05* ஆண்டுகள் வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும். (நிரந்தர வதிவிடத்தை நிரூபிப்பதற்கு வாக்காளர் பட்டியல் சமர்ப்பிக்க வேண்டும்)

(iv) சேவையின் அத்தியாவசிய தன்மைக்கேற்ப சேவை நிலையம் அமைந்துள்ள கைதடி பிரதேசத்திலிருந்து 7Km சுற்றுவட்டத்திற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

(v) விண்ணப்பதாரர் தூர பிரதேசத்தில் வசிப்பவராயின் மேற்படி பதவிகளுக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் கடமைக்கு அறிக்கையிடுவதற்கு பாதிப்பில்லாத வகையில் வதிவிடத்தினை அமைத்துக் கொள்ள வேண்டும். (தங்குமிட வசதிகள் எவையும் வழங்கப்படமாட்டாது)

(vi) **வயது** :- விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதி அன்று ***18*** **வயதிற்கு** குறையாதவராகவும் ***40*** **வயதிற்கு** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## 2. சேவை நியதிகளும் நிபந்தனைகளும்

- சுழற்சி முறையிலான கடமைச் சுற்றுக்கமைவாக கடமைக்குச் சமூகமளித்தல் வேண்டும்
- கடமை நேரத்தில் சீருடையில் இருத்தல் வேண்டும்
- அரச முதியோர் இல்ல நியதிகளுக்கு உட்பட்டு கடமையாற்ற வேண்டும்
- கடமை சுற்று நாட்களில் வரும் அரசாங்க விடுமுறை நாட்கள் சாதாரண வேலை நாட்களாக அமையும்
- வாரத்தில் ஆகக்குறைந்தது ஒரு நாள் ஓய்வு நாளாக அமையும்.
- ஒப்பந்த அடிப்படையிலான நியமன காலப்பகுதி **ஒரு *(01)*** வருடமாகும்.

**மேற்குறிப்பிட்ட தகைமைகள் யாவும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற சாதுசேவிகா, பரிசாரகர் - ஆண், பரிசாரகர் - பெண், சமையலாளர், தொழிலாளி - ஆண் ஆகிய *05* பதவிகளுக்கும்** பொதுத் தகைமையாக அமையும் என்பதுடன், ஏனைய தகைமைகளும் ஒவ்வொரு பதவியணிக்கும் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

## 3. ஏனைய தகைமைகள்

### 3.1 சாதுசேவிகா

**3.1.1 சம்பளம் :-**

- இப்பதவிக்கான மாதாந்த சம்பளம் ரூபா. **59,117/-** ஆகும்.
- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் பிரகாரம் 2026.01.01ஆம் திகதியிலிருந்து சம்பளம் மாற்றியமைப்புச் செய்யப்படும்.

**3.1.2 தகைமைகள் :-**

**3.1.2(a) கல்வித் தகைமைகள் :-**

விண்ணப்பதாரி க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் சிங்களம் / தமிழ் / ஆங்கிலம், கணிதம் உட்பட வேறு இரண்டு பாடங்களில் திறமைச்சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலாவது க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொதுப்பரீட்சை தவிர)

**3.1.2(b) தொழிற்தகைமைகள் :-**

விண்ணப்பதாரி அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் / ஏதாவது பதிவு செய்யப்பட்ட பிரத்தியேக நிறுவனங்களில், முதியோர் பராமரிப்பு தொடர்பான, ஆகக்குறைந்தது 06 மாத பயிற்சி / 06 மாத சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

**3.1.3 ஆட்சேர்ப்பு முறை :-**

**3.1.3(a)** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி வரிசை ஒழுங்கில் (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

| தொ.இல | புள்ளி வழங்கல் திட்டம் (பாடவிதானம்) | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|
| 01. | **கல்வித் தகைமைகள்**<br>க.பொ.த (சா/த) பரீட்சையின் பெறுபேற்றுக்கான புள்ளி<br>க.பொ.த (உ/த) பரீட்சையின் பெறுபேற்றுக்கான புள்ளி | 30<br>10 |
| 02. | **தொழிற்தகைமைகள்**<br>6 மாதப் பயிற்சி / 6 மாத சான்றிதழ் பாடநெறி<br>6 மாதங்கள் தொடக்கம் 1 வருடம் வரை - 20 புள்ளி<br>1 வருடம் தொடக்கம் 2 வருடங்கள் வரை - 30 புள்ளி<br>2 வருடங்களுக்கு மேல் - 40 புள்ளி | 40 |
| 03. | கடமையுடன் தொடர்புபட்ட விடய் அறிவு | 15 |
| 04. | நேர்முகப் பரீட்சையில் அவதானிக்கப்பட்ட திறமை | 05 |
| | **மொத்தப் புள்ளிகள்** | **100** |

**குறிப்பு** :- இப் பதவிக்காக பத்துக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் பரீட்சை நடாத்தப்பட்டு அதில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்படுவர்.

**3.1.3(b) போட்டிப் பரீட்சைக்கான பாடத்திட்டம்**

| | பாடவிபரம் | மணித்தியாலயம் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| பகுதி I | மொழித்தேர்ச்சி (கடமையுடன் தொடர்புபட்ட விடயங்கள்) | 1 மணித்தியாலயம் | 50 |
| பகுதி II | பொது அறிவு (கடமையுடன் தொடர்புபட்ட விடயங்கள்) | 1 மணித்தியாலயம் | 50 |

**குறிப்பு** :- சித்தியெய்த வேண்டிய புள்ளிகள் 100 இற்கு 40 புள்ளிகள் ஆகும்.

## 3.2 பரிசாரகர் (ஆண்) / (பரிசாரகர் பெண்)

### 3.2.1 சம்பளம் :-

- இப்பதவிக்கான மாதாந்த சம்பளம் ரூபா. **56,765/-** ஆகும்.
- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் பிரகாரம் 2026.01.01ஆம் திகதியிலிருந்து சம்பளம் மாற்றியமைப்புச் செய்யப்படும்.

### 3.2.2 தகைமைகள் :-

#### 3.2.2(a) கல்வித் தகைமைகள் :-

விண்ணப்பதாரி க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் இரு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் ஐந்து பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

#### 3.2.2(b) தொழிற்தகைமைகள் :-

விண்ணப்பதாரி அரசாங்க வைத்தியசாலை அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் வைத்தியசாலை ஒன்றில் நோயாளர் பராமரிப்பு சம்பந்தமாக ஒரு வருட கால வேலை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

### 3.2.3 ஆட்சேர்ப்பு முறை :-

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி வரிசை ஒழுங்கில் (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

| தொ.இல | புள்ளி வழங்கல் திட்டம் (பாடவிதானம்) | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|
| 01. | கல்வித் தகைமைகள்<br>க.பொ.த (சா/த) பரீட்சையின் பெறுபேற்றுக்கான புள்ளி அளவு<br>பழைய பாடத்திட்டம்: D - 04, C - 02, S - 01<br>புதிய பாடத்திட்டம்: A - 04, B - 03, C - 02, S - 01 | 35 |
| 02. | பதவியுடன் சம்பந்தமான வேலை, அனுபவம் (ஒவ்வொரு வருடத்திற்கும் 05 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்) | 60 |
| 03. | நேர்முகப் பரீட்சையில் அவதானிக்கப்பட்ட திறமை | 05 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

## 3.3 சமையலாளர்

### 3.3.1 சம்பளம் :-

- இப்பதவிக்கான மாதாந்த சம்பளம் ரூபா. **56,765/-** ஆகும்.
- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் பிரகாரம் 2026.01.01ஆம் திகதியிலிருந்து சம்பளம் மாற்றியமைப்புச் செய்யப்படும்.

### 3.3.2 தகைமைகள் :-

**3.3.2(a) கல்வித் தகைமைகள் :-**

விண்ணப்பதாரி க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் இரு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் ஐந்து பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**3.3.2(b) தொழிற்தகைமைகள் :-**

விண்ணப்பதாரி அரசாங்க நிறுவனம் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்பட்ட **ஆறு மாத** சமையல் தொடர்பான கற்கை நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரி அரச அங்கீகாரம் பெற்ற விடுதி அல்லது நிறுவனமொன்றில் **03 வருட** காலம் சமையலாளராக கடமையாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### 3.3.3 ஆட்சேர்ப்பு முறை :-

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி வரிசை ஒழுங்கில் (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

| **தொ.இல** | **புள்ளி வழங்கல் திட்டம் (பாடவிதானம்)** | **உச்சப் புள்ளிகள்** |
|---|---|---|
| 01. | கல்வித் தகைமைகள்<br>க.பொ.த (சா/த) பரீட்சையின் பெறுபேற்றுக்கான புள்ளி அளவு<br>பழைய பாடத்திட்டம்: D - 04, C - 02, S - 01<br>புதிய பாடத்திட்டம்: A - 04, B - 03, C - 02, S - 01 | 35 |
| 02. | பதவியுடன் சம்பந்தமான வேலை, அனுபவம் (ஒவ்வொரு வருடத்திற்கும் 05 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்) | 60 |
| 03. | நேர்முகப் பரீட்சையில் அவதானிக்கப்பட்ட திறமை | 05 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

### 3.4 தொழிலாளி (ஆண்)

**3.4.1 சம்பளம் :-**

- இப்பதவிக்கான மாதாந்த சம்பளம் ரூபா. **55,525/-** ஆகும்.
- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் பிரகாரம் 2026.01.01ஆம் திகதியிலிருந்து சம்பளம் மாற்றியமைப்புச் செய்யப்படும்.

**3.4.2 தகைமைகள் :-**

**3.4.2(a) கல்வித் தகைமைகள் :-**

விண்ணப்பதாரி க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் இரு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் ஐந்து பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**3.4.2(b) தொழிற்தகைமைகள் :-**

விண்ணப்பதாரி முதியோர் அல்லது நோயாளர் தொடர்பான அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறைந்தது ஒரு வருட காலம் தொழிலாளியாக கடமையாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**3.4.3 ஆட்சேர்ப்பு முறை :-**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி வரிசை ஒழுங்கில் (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

| தொ.இல | புள்ளி வழங்கல் திட்டம் (பாடவிதானம்) | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|
| 01. | கல்வித் தகைமைகள்<br>க.பொ.த (சா/த) பரீட்சையின் பெறுபேற்றுக்கான புள்ளி அளவு<br>பழைய பாடத்திட்டம்: D - 04, C - 02, S - 01<br>புதிய பாடத்திட்டம்: A - 04, B - 03, C - 02, S - 01 | 40 |
| 02. | பதவியுடன் சம்பந்தமான வேலை அனுபவம் (ஒவ்வொரு வருடத்திற்கும் 05 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்) | 55 |
| 03. | நேர்முகப் பரீட்சையில் அவதானிக்கப்பட்ட திறமை | 05 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

## 4. விண்ணப்பிக்கும் முறை

4.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவங்களில், தாம் விண்ணப்பிக்கும் பதவிக்குப் பொருத்தமான படிவத்தினை தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

4.2 ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஒவ்வொரு பதவிக்குமென தனித்தனியான விண்ணப்பங்களையே சமர்ப்பித்தல் வேண்டும்.

4.3 விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/182"** என குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பொ.குகநாதன்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2025.06.19

பொ.குகநாதன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்